மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத்தலைவர்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்).
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை).
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச் சட்டமுன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

10, அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு. 1993, (ஆ. செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. ''1993-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

9, சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி,

(ஊ) பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்ட முன்வடிவு, 1993

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்ட முன்வடிவு. மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

"1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்.)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.
மாண்புமிகுவருவாய்த்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

பிற்பகல் 12-20

11. அரசினர் தீர்மானங்கள்.

(அ) 29—4—1993 அன்று பேரவைக்கு அளிக்கப் பெற்ற 'கரண்ட்' இதழ் மீதான அவை உரிமைக் குழுவின் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னவர் அவர்களுடைய தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று பேரவைக்கு அளிக்கப் பெற்ற 'கரண்ட்' இதழ் மீதான அவை உரிமைக் குழுவின்